நிந்தவூர் பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிந்தவூர் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிந்தவூர் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டில் அதிகாரமற்ற கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் ரூபா 190,240 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.	விதிக்கப்பட்ட தண்டப்பணத் தொகையினை செலுத்துமிடத்து அதனை கணக்குகளுக்கு எடுத்துக் கொள்ளக் கூடியதாகவிருக்கும் அல்லது விதிக்கப்பட்ட தண்டப்பணத்தினை செலுத்தாத விடத்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டுக்கான வருமானம் உரிய ஆண்டில் காட்டபட வேண்டும்
(ஆ)	2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 07 வகையான பொருட்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	நன்கொடையாக கிடைக்கப்பெற்ற சொத்துக்களின் பெறுமதி தொடர்பாக தகவல் கிடைக்கப் பெறாமையாலேயே 2024 இன் இறுதிக் கணக்கறிக்கையில் சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்க முடியாமலிருந்தது.	நன்கொடையாக கிடைக்கப்பெற்ற பொருட்களினை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 06 வகையான நிலையான சொத்துக்கள் ரூபா 147,564,254 விடயத்திற்குரிய சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தங்களால் சுட்டிக் காட்டப்பட்ட ஆவணங்கள் எமது அலுவலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற போதும் அவைகள் தவறுதலாக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	கணக்காய்வின் போது ஆவணங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 136 பிரிவு	சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் கட்டிடங்கள் மற்றும் காணிகளினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி வீதவரி அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள அரச நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு பெறுமதி மதிப்பீடு செய்து எம்மால் தற்போதும் வீதவரியானது அறவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது.	சட்ட விதிகளின் பிரகாரம், வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்			
(i) இலக்கம் 81 விதி	ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இவ்விடயம் தொடர்பாக விபரங்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்கின்ற போதும், அவர்களது அலுவலகத்தில் சில தாமதங்கள் ஏற்படுகின்றன.	நிதி, நிருவாக விதிகளின் பிரகாரம், முத்திரைத் தீர்வைகளை உரிய காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) இலக்கம் 218 விதி	சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு வருடமும் ஒரு முறையேனும் பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களையும் பரீட்சிப்பதற்கான நடவடிக்கையானது நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து மேற்கொள்வதற்கான கோரிக்கை விடப்பட்டு, நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கினறது.	நிதி, நிருவாக விதிகளின் பிரகாரம் காணி கட்டடம் பரிட்சிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 880	பிணை செலுத்த வேண்டிய நிதி மற்றும் களஞ்சியத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காசு மற்றும் களஞ்சியம் தொடர்பான பிணைவைப்பு மறுப்பதனால் கடமைப்பட்டியலினூடாகவே கடமைகள் ஒப்படைக்கப்பட்டு நாளாந்தம் பரிசீலனை செய்யப்படுகின்றன. தற்போது பிணைப்பணம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கபடுகின்றன.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், நிதி மற்றும் களஞ்சியத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணத்தினை பெற நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 32,188,868 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 86,270,197 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	11,450,000	79,480,622	10,334,719	69,145,903	4,033,809	64,540,592	327,486	65,300,215
(ii)	வாடகை	7,947,000	11,002,153	7,778,688	3,198,466	3,198,466	7,952,405	7,952,405	3,198,466
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	1,700,000	1,404,950	1,404,950	-	1,262,250	1,262,250	1,262,250	-
(iv)	ஏனைய வருமானம்	948,000	1,668,362	1,668,362	-	7,931,292	29,126,048	29,126,048	7,931,292
	கூட்டுத் தொகை	22,045,000	93,556,087	21,186,719	72,344,369	16,425,817	102,881,295	38,668,189	76,429,973

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	ஆதனவரி மதிப்பீடுகள் பூரணமாகவும் இயன்றவரையில் சரியாவும் தயாரிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால், 14,572 ஆதனங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 9,000,000 ஆதனவரி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து 1,705 ஆதனங்களிடம் மாத்திரம் ரூபா 6,234,177 மாத்திரமே சபையினால் அறவிடப்பட்டிருந்தது.	CAT 2020 Software இல் ஆதனவரி மதிப்பீட்டினை பூரணமாகவும், இயன்றவரையில் சரியாகவும் தற்போது எம்மால் தயாரிக்கக்கூடியதாக காணப்படுகின்றது. மேலும் மேலதிகமாக உத்தியோகத்தர்களை அறவிடவேண்டிய வருமான நிலுவைகளை பயன்படுத்துகின்றோம்.	அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் ஆதனவரி நிலுவையாக ரூபா 2,765,823 காணப்படுகின்றது. இருப்பினும், 06 உத்தியோகத்தர்கள் ஆதனவரியினை அறவிடுவதற்கு பயன்படுத்தப்பட்டிருப்பினும், அவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு இல்லாமலும் இலக்கு அறவீடு (Target Collection) இல்லாமலும், ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதனாலும் ஆதனவரி அறவிடப்படாமல் காணப்படுவது அவதானிக்கப்பட்டிருந்தது.	வருமானப்பிரிவின் ஊடாக, உத்தியோகத்தர்களை கடந்த காலங்களில் அறவிடவேண்டிய வருமான நிலுவைகளை அறவிட்டுக்கொள்ளல் நோக்கத்திற்காக, வட்டார மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் என்றவாறு எல்லைகள் பிரிக்கப்பட்டு அதற்கமைவாக உத்தியோகத்தர்களுக்கான கடமைப்பட்டில் வழங்கி தற்போது வருமானமீட்டும் நடவடிக்கை செயற்படுகின்றது.	மேற்படி
(இ)	சபையினால் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் சோலை வரி மீள மதிப்பீடு செய்யப்படாமல் பழைய மதிப்பீட்டுப் பெறுமதிக்கே பிரதான வீதியிலுள்ள சுமார் 250 கடைகளுக்கு சோலை வரி அறவிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	தொடர் நடவடிக்கையானது எம்மால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.	உரிய காலத்தில் மதிப்பீடு செய்து வருமானத்தி னை உழைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2018 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரைக்கும் 15 தொடக்கம் 20 கடையறைகளினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபைக்கு ரூபா 1,495,200 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.	தேவையான நபர்கள் முன்வராத தன்மையானது காணப்படுகின்றது. இருப்பினும் எதிர்வரும் காலங்களில் கடையறைகளை உரிய முறைப்படி வாடகைக்கு விடுவதற்கான அல்லது வேறு தேவையுடைய நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கையானது எம்மால் மேற்கொள்ளப்படும்.	உரிய முறைப்படி வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

(உ)	1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணி கொடுக்கல் வாங்கல் மீதான முத்திரைக் கட்டணங்கள் மீளளிப்பு கோரல் தொடர்பில் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்தும், சபையினால் 2024 ஆம் ஆண்டுக்கான முத்திரைக் கட்டணங்கள் கோரி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எம்மால் போதுமானவரை தேவையான விபரங்களை விரைவாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையானது மேற்க்கொள்ளப்பட்டதற்க மைவாக குறித்த நிதியாண்டுக்கான முத்திரைக் கட்டணங்கள் கோரிப்பெறப்பட்டு கொண்டிருக்கின்றது.	முத்திரைக் கட்டணங்கள் மீளளிப்பு கோரல் தொடர்பில் விண்ணப்பங்களை பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டில் மண்டப வாடகையாக ரூபா 256,439 அறவிடப்பட்டிருப்பினும், வாடகைக்கு விடப்படுவதற்கு முன்பாக எதுவித பாதுகாப்பு வைப்பும் பெறாமல் வழங்கப்படுகின்ற நடைமுறையினால் அங்குள்ள பொருட்கள், கதிரை மேசைகளுக்கு பாதிப்பு ஏற்படுமாயின் அதனை ஈடுசெய்ய முடியாமல் காணப்படுகின்றது.	இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் மாதத்திலிருந்து மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையில் ஆலோசனைக்கு விடப்பட்டு தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	பொதுமக்களால் பயன்படுத்தப்ப டும் சபையின் சொத்துக்களுக்கு முன்கூட்டியே பாதுகாப்பு வைப்புப்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மின்சார பொருட்கள் விநியோக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், மீளாய்வாண்டில் ரூபா 2,000,000 மின்சார பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டிருந்தது.	இவ்விடயம் தொடர்பான தகவல்களை கணனியில் தனியானதொரு மென்பொதியிலி ட்டு அதன் பிரதிகள் பரிசோ திக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு வருவதுடன், தனியானதொரு பதிவேடும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.	மின்சாரப் பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	நிதிக்கூற்றில் நிலுவையாக மின்சார வருமதி ரூபா 2,477,321 செலுத்த வேண்டிய மின்சார கடன் ரூபா 2,951,150 சொத்து பொறுப்புக்களில் நீண்டகாலமாக தீர்வின்றி காணப்படுகின்றன.	அத்தொகைகள் மின்சார சபையானது பிரதேச சபையின் கீழ் செயற்பட்ட காலத்தில் ஏற்பட்ட நிலுவையாகும். இதனை தீர்க்க எதிர்கால சபையின் ஆலோசனைக்கு விடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமதிகள் மற்றும் நிலுவைகள் உரிய காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ)	நிதிக்கூற்றில் ஒதுக்கங்களின் கீழ் ரூபா 77,500 பிரதியீட்டு ஒதுக்கம் ஏற்பாடு செய்யப்பட்டு நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன.	2025 நிதிக்கூற்றின் ஊடாக தேவையான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நீண்டகால ஏற்பாடுகள் உரிய நோக்கத்திற்கு பன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	சபையினால் 2020 ஆம் ஆண்டு முத்திரை தீர்வை கொடுப்பனவிலிருந்து ரூபா 5,453,970 தொகை வருமானவை உள்ளுராட்சி ஆணையாளரினால் 2021 ஆம் ஆண்டில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த தொகையானது இதுவரை காலமும் செயலாளரினால் பெற்றுக் கொள்வதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பணத்தின் மீதான பெறுமதி இழப்பு தொடர்ச்சியாக ஏற்பட்டுகின்றது.	மேலும் இது தொடர்பாக பல தடவைகள் கோரிக்கைகள் விடப்பட்ட போதும் இதுவரையில் கிடைக்கப்பெற வில்லை. தற்போது தொடர் நடவடிக்கை எடுக்கப்படு கின்றது.	முத்திரைத் தீர்வை வருமானத்தி னை முழுமையாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் (LDSP) ஐஸ் உற்பத்தி செய்வதற்கான பொருட்கள் ரூபா 3,575,000 க்கும் மற்றும் ரூபா 14,000,000 க்கு கட்டிடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை பயன்படுத்தப்படாமல் பாவனையற்றுக் காணப்படுகின்றது.	உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் (LDSP) நிர்மானிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் பொருட்களை முறையான பயன்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.	உரிய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபையினால் பயன்படுத்தப்படும் 11 வாகனங்களுக்கான உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சீர்செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றது	வாகனங்களுக்கான பெயர் மாற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான 14 வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 05 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திருத்த முடியாத வாகனங்களை வருடாந்த பொருட்கணிப்பீட்டு சபையின் அறிக்கைகளுக்க மைவாக பிரதிப் பிரதம செயலாளர் பிரதிப் பிரதம செயலகம் - கி.மா, திருகோணமலை ஊடாக இருப்புக் கணிப்பு குழு மற்றும் விலை மதிப்பீடு செய்வதற்கான விசேட ஆய்வு சபையினை நியமித்து அவைகளை	திருத்த வேண்டிய வாகனங்களில் திருத்தி பயனபாட்டுக்குட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

		ஏலவிற்பனை மற்றும் தொடர்நடவடிக்கை செய்வதற்கான செயற்பாடானது மேற்கொள்ளப்படு கின்றன.	
(இ)	சபையினால் பராமரிக்கப்படும் 06 வாகனங்கள் கணக்காய்வுத் திகதி வரை நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்படாமல் காணப்படுகின்றது.	சீர்செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்க்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது	நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	2022 ஆம் ஆண்டு பொருட் கணிப்பீட்டின் போது விற்பனை (S), திருத்தம் (R) என அடையாளமிடப்பட்ட Tractor and Trailer தொடர்பாக உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பிரதிப் பிரதம செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	வாகனங்கள் அடையாளம் காணப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டில் LDSP வேலைத்திட்டத்தினூடாக நிந்தவூர் முன்பள்ளி கட்டிடத் தொகுதிக்கான Item: E – 05 supplying and laying 80mm tick inter locking block வேலைகளுக்கான செய்யப்படாத வேலைக்காக மேலதிக ரூபா 162,313 சிபாரிசு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மற்றும் பல இடங்களில் paint பூச்சு நீங்கி காணப்பட்டது.	மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள பொருட்கள் (நிலத் தரைக்கற்கள்) பொருத்த வேண்டிய இடத்தில் குறித்த சிறுவர் பாலர் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்கள் விளையாடுவதற் கான விளையாட்டுப் பொருட்களை பொருத்துதல் மற்றும் அவ்விடத்தினை அழகுபடுத்துவதற் கான பூச்சாடிகளை வைத்தல் பொருத்தப்பாடு உடையதாகவிருக்கும் என கேட்டுக்கொள்ளப்பட்டதற் கமைவாக, குறித்த பொருட்கள் குறித்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு பொருத்தமான தொரு இடத்தில் பொருத்துவதற்காக வைக்கப்பட்டிருந்தது.	மேலதிகமாக கொடுக்கப்பட்ட தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபையில் 07 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், 03 சாரதிகள் மாத்திரம் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் ஏனைய உத்தியோகத்தர்களினை பயன்படுத்துகின்றனர்.	இதற்கான கோரிக்கையானது எம்மால் பல தடவைகள் விடப்பட்டிருந்தும் பொருத்தமான உத்தியோகத்தர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. இருப்பினும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றது.	ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	அறவிட வேண்டிய கடன் நிலுவையான ரூபா 32,620 உரிய நபர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இக்கடன்களின் நிலுவைத் தொகைகளை உரிய ஊழியர்கள், அவர்களது பிணைகாரர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து அறவிடுவதற் கான நடவடிக்கையா னது தற்போது எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு கொண்டிருப்பதுடன், எஞ்சிய தொகைக்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	கடன்களின் நிலுவைத் தொகையினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
சபையினால், உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 04 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நி.பி. 133 மற்றும் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்திருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வு நடைமுறைகளை பின்பற்றல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பாக நியமிக்கப்பட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களை கொண்டு தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீர்செய்து கொள்வதற்கான நடவடிக்கையானது மேற்கொள்ளப்படும்	உள்ளகக் கணக்காய்வு, நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க சுற்றாடல்	இவ்விடயம் தொடர்பாக நிறுவனங்களின்	உரிய காலத்தில் புதுப்பித்தல் செய்ய

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
பாதுகாப்பு அனுமதிப் பத்திர புதுப்பித்தல் தொடர்பாக, மீளாய்வாண்டில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர வருமானமாக ரூபா 192,750 பெறப்பட்டிருந்தும், 22 நிறுவனங்களின் அனுமதிப் பத்திரம் பெறப்படாமல் கடந்த 10 வருடங்களாக வியாபாரம் நடாத்தி வருகின்றனர்.	விபரத்தினை திரட்டி அதன் பிரகாரம் பதிவேட்டினை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கை மற்றும் காலாவதியான நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு புதுப்பித்துக் கொள்ளவதற்கான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் நிதியாண்டுக்காக தயாரிக்கப்படவுள்ள எமது பிரதேச சபையின் பாதீட்டில் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீர்செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது	2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின் படி நிலைபெறா அபிவிருத்தி இலக்குகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 திண்மக்கழிவகற்றல் கட்டணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	திண்மக்கழிவு முகாமைத்துவத்தினை திறம்பட மேற்கொள்வதற்காக ரூபா 4,980,969 செலவில் குப்பைகள் தரம்பிரித்தல் நிலையமொன்று அமைக்கப்பட்டிருந்தும், 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை குறித்த நிலையம் பயன்பாடற்று காணப்படுகின்றது.	குப்பைகள் தரம்பிரித்தல் நிலையத்தின் ஊடாக தரம்பிரித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதா யின் அதற்கு ஏனைய வசதிகள் செய்ய வேண்டியுள்ளது டன், சபையின் அதிகார எல்லைக்குள் சேகரிக்கப்படு கின்ற திண்மக் கழிவுகளை தரம் பிரிக்கப்பட்டவாறே சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது	குறித்த நிலையத்தினை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இரு திண்மக்கழிவகற்றல் மேற்பார்வை உத்தியோகத்தர்களிடம் கணக்காய்வுத் திகதியில் எதுவித களநிலவர பதிவேடு, முன்நிகழ்ச்சித் திட்டம், வட்டார அசாதாரண செயற்பாட்டு பதிவுகள் காணப்படவில்லை.	இவ்விடயம் தொடர்பாக திண்மக் கழிவகற்றல் மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு தேவையான விளக்கங்கள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் தற்போது மேற்க்கொள்ளப்பட்டுள்ள து.	மேற்பார்வை உத்தியோகத்தர்களிட மிருந்து நாளாந்தக் கையேடு முன்நிகழ்ச்சித்திட்டம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.